உங்கள் அந்தியகால நண்பன்
பிறைற் ஹவுஸ்
தூய தமிழ்ப் பெயருடன் சேவையில்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 4

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ எம்பாமிங்,
★ பிரேதப் பெட்டிகள்;
★ வர்தி வாகனங்கள்
சகலவித அந்தியகால சேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 16 புதன்கிழமை (02-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 302

## முச்சந்தி முரளி



சார்க்குப் போக்குச் சொல்லி சார்க்கைக் குழப்பப் போகி னம் போலை......!

### ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, அக். 2

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு நீங்கலான ஏனைய பகுதிகளிலும் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்றுக் காலை 6.00 மணி முதல் நீக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [இ-எ]

### குப்பிளான் படையினர் சூடு! ஷெல் வீச்சு!!

யாழ்ப்பாணம், அக். 2

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் உள்ள முகாம்களில் இருந்து படையினர் குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தையும், ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கும், நேற்று அதிகாலை 4 மணிக்கும் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ஒ-3)

### சரவணையை நோக்கி ஷெல்

யாழ்ப்பாணம், அக். 2

காரைநகர் வத்றுறை இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6 30 மணியளவில் சரவணைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இரவு 10 மணிக்குப் பின்னர் முகாம் பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன. [ஒ-15]

### ஆயுதப் படையினருக்கு இரத்தம் தேவையாம்

கொழும்பு, அக். 2

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடக்கும் சண்டைகளில் காயமடையும் ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸாருக்கு ஏற்ற இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக அநுராதபுரம் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெற்குப் பத்திரிகைகள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும், தேவைப்படும் பட்சத்தில் நடமாடும் இரத்த வங்கிச் சேவையை பொதுமக்கள் நாடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-8]

## புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தால் சீற்றம்!

# கொழும்பு சார்க் மாநாடு; குழப்ப இந்தியா முயற்சி!

### ஸ்ரீலங்காவுடனான உறவில் நெருக்கடி

கொழும்பு, அக்டோபர் 2

இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராகப் போராடுவதற்காக ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியது என்ற குற்றச்சாட்டு வெளியானதை அடுத்து, இந்திய-ஸ்ரீலங்கா உறவில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா மீது சீற்றம் கொண்டிருக்கும் இந்தியா, அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் தெற்காசிய நாடுகள் அமைப்பின் (சார்க்கின்) தலைவர்கள் மாநாட்டைக் குழப்ப முயற்சி செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் (நவம்பர்) 7, 8, 9 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டை நடக்க விடாமல் செய்வதற்காக பல தரப்பட்ட பொய்க் காரணங்களைக் காட்டும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசவட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமல் அதனை இந்தியா புறக்கணிக்கும் என்றும்—

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை அரசு ஒப்புக் கொண்டிருப்பதால், சார்க் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இந்தியப் பிரதமர் கொழும்புக்கு விஜயம் செய்யும் போது அங்கு உரிய பாதுகாப்பு அவருக்கு கிடைக்காது என்றும்— இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### கிழக்கில் படை குவிப்பு

யாழ்ப்பாணம், அக். 2

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சில பகுதிகளில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கை அடுத்து அப்பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், அப்பகுதிகளில் தமிழ் மக்கள் படுமோசமாக படையினரால் தாக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரியவந்தது. (ஒ-3)

## 21 ஈழத் தமிழர்கள் தமிழகத்தில் கைது!

சென்னை, அக். 2

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு கட்டமாக தமிழ் நாட்டில் தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் வைத்து 21 ஈழத் தமிழரும் 8 இந்தியத் தமிழரும் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான மெய்யப்பன் என்பவர் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் தமிழகத்தில் தங்கி இருந்தபோது அவருக்கு ஒரு மாதகாலம் புகலிடம் கொடுத்தவர் என்று கூறப்படுவதாகவும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [ஒ-எ]

## பட்ஜெட்டில் கால் பங்கு இராணுவச் செலவுக்கு!

கொழும்பு, அக். 2

ஸ்ரீலங்காவின் பட்ஜெட்டில் கால்பங்கு இராணுவத்துக்காகச் செலவிடப்படுகிறது.

பிரபல இராணுவ சஞ்சிகையான "ஜேன்ஸ் டிவென்ஸ் வீக்லி" இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா பெருமளவு ஆயுதங்களைத் தொகையாக சீனாவிடமிருந்து கொள்வனவு செய்கிறது.

1982 இல் ஸ்ரீலங்காவின் இராணுவச் செலவினம் இரண்டரைக் கோடி அமெரிக்க டொலராக இருந்தது. 1988 இல் இது 58 கோடி 80 இலட்சம் அமெரிக்க டொலராக (சுமார் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாவாக) உயர்ந்தது.

இது 1991 இல் 45 கோடி அமெரிக்க டொலராக இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சீனாவின் எவ்-7 ரக இடைமறித்துத் தாக்கும் விமானங்கள், எவ்.ரி. (மிக்-17) உளவு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலைத் தாக்குதலில் 3 கடற்படையினர் பலி!

### அறுவர் படுகாயமடைந்தனர்

கொழும்பு, அக். 2

திருகோணமலை மாவட்டம் பாலம்போட்டாறுப் பகுதியில் நேற்று முன்தினம் (திங்கள்) விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் 3 கடற்படையினர் கொல்லப்பட்டனர்; 6 பேர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு கொழும்புப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தில் படையினர் சென்ற பவள் வாகனம் சிதறி நாசமானது தெரிந்ததே. (ஒ-எ-3)

## ஹெய்ட்டியில் இராணுவப் புரட்சி! மதகுருவான ஜனாதிபதி பதவியிழப்பு!!

லண்டன், அக். 1

கரிபியன் தீவான ஹெய்ட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திடீர் இராணுவப்புரட்சியின் போது ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பிரதமரும் அமைச்சர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

வண. பிதா ஆர்க்லைட்டின் ஆட்சியே நேற்று முன்தினம் கவிழ்க்கப்பட்டது.

தற்போது வெனிசுவேலாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ஆர்க்லைட், தமக்கு புகலிடம் வழங்குமாறு பிரான்ஸைக் கோரியுள்ளார்.

இதற்கிடையில் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து நேற்று தலைநகர் போட் ஒவ் ஸ்பெயினில் மக்கள் திரளாகக் கூடி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் கண்ணி வெடிகள் இஸ்ரவேலின் கைவேலையே!

### முன்னாள் மொஸாட் அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, அக். 2

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு பேரிழப்பைக் கொடுத்து வரும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகள் இஸ்ரவேலின் கைவேலையாகும்.

இஸ்ரவேலின் உளவுப் பிரிவு மொஸாட்டில் முன்னர் கடமையாற்றிய அதிகாரியான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி இவ்வாறு கூறியிருக்கிறார்.

"ஜேன்ஸ் டிவென்ஸ் வீக்லி" சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே, அவர் இப்படிக் கூறினார்.

யூஸி-சப் மெஷின்கன், கலிலி [illegible] தோளில் வைத்து ஏவும் றொக்கட் லோஞ்சர்கள், கலிலி ஸ்னைப் மெஷின்கன், கழுகு பிஸ்டல்கள், ரப்பர் படகுகள், நீர்த்தடுப்பு ஆடைப்புகள், எரிபொருள்கள் என்பவை உட்பட, பல்வேறு ரக இராணுவக் கருவிகளை இஸ்ரவேல் விடுதலைப் புலிகளுக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் நரசிம்மராவுக்கு தூதுவர் ஜா விளக்கம்

சார்க் உச்சிமாநாடு சம்பந்தமான சிக்கல் எழுந்திருக்கும் இவ்வேளையில் கொழும்புக்கான இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்றார். நேற்று அங்கு அவர் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

ஸ்ரீலங்காவில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி குறித்தும்—

சார்க் உச்சிமாநாடு பற்றிய விவகாரங்கள் குறித்தும் அச்சந்திப்பின் போது தூதுவர் ஜா பிரதமருக்கு எடுத்துரைத்ததாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

பிரதமரைச் சந்திப்பதற்கு முன்னர் அவர் ஜனாதிபதி வெங்கட்ராமன், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். [உ-எ-10]

## ஈரோஸ் எம். பிக்களாக வருவது விடுதலைப் புலிகளே

### சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, அக். 2

ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இடம்பெற இருக்கும் 11 பேரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களே என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்த எம். பிக்கள் நாடாளுமன்றம் வரவிருப்பது பல பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும்.

அரசியல் குற்ற விசாரணை பிரேரணையில் இருந்து ஜனாதிபதியைக் காப்பாற்றும் முயற்சியாகவே இந்த எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வருகிறார்கள். — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-எ)

## ஈரோஸ் எம். பிக்களினால் நாட்டிற்கு ஆபத்தாம்!

கொழும்பு, அக். 2

"ஈரோஸ் பிரதிநிதிகள் விட்டுச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இப்போது நிரப்புவது நாட்டிற்கு ஆபத்தாக முடியும்" — இவ்வாறு சிங்கள மகாஜன பெரமுன (சிங்கள மக்கள் முன்னணி) எச்சரித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் சேர்த்திருப்பது இலங்கைத் தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் முயற்சியாகத் தோன்றுகிறது என்று எஸ். பி. ஆர். எம். எம். பேச்சாளர் ஒருவர் சொன்னார். [உ-எ]

## எதிரணிப் பிரேரணை தோற்பதற்கு வாய்ப்பு!

கொழும்பு, அக். 2

ஆளும் ஐ. தே. க. அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடையும் வாய்ப்புகளே அதிகம் இருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி நேற்று அறிவித்தது.

ஈரோஸ் அமைப்பின் சார்பில் புதிதாக நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கும் 11 எம். பிக்களும் ஆளும் ஐ. தே. க. அரசை ஆதரித்து வாக்களிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐ. தே. க அரசுக்கு மேலும் வலுவையூட்டியிருப்பதாக நடுநிலை அவதானிகள் தெரிவித்தனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தால் அது எதிர்க்கட்சியினரிலும் பார்க்க, அவர்களுக்கு ஆதரவாகத் தற்போது செயற்படும் ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவுக்கே பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நம்பிக்கையில்லா பிரேரணை அக். 8 விவாதத்துக்கு வரும்

கொழும்பு, அக். 2

இம்மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நம்பப்படுகிறது.

சபாநாயகர் எம். எச். மூகம்மது கொழும்பு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையில் உள்ள எம். பிக்களின் கையொப்பங்கள் மோசடி செய்யப்பட்டவையா என்பது குறித்து ஆராய்வதற்கு — அவற்றை பரிசோதனை செய்வதற்காக — நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார்.

அதுபற்றிய முடிவு, எதுவும் உடனடியாகக் கிடைக்காது எனக் கருதப்படுகிறது.

அதன் காரணமாக அரசியல் குற்றப் பிரேரணை குறித்து தமது முடிவைச் சபாநாயகர் தெரிவிக்க நாளாகும் என்றும்—

எட்டாம் திகதி சபை கூடும் போது நம்பிக்கையில்லாப்

[4-ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3-ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(இ/0533)

### மணப்பெண் தேவை

யாழ் சத்தோலிக்க. 41 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கு ஆசிரியையும், இந்து 41 வயது வியாபாரிக்கு செவ்வாய்க் குற்றமுள்ள மணப் பெண்ணும், 39 வயது உத்தியோகத்தருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி. கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(18290)

யாழ் இந்து. 7 இல் செவ்வாய் [குற்றம் குறைந்த] 31 வயது B Sc. சிவில் பொறியியலாளருக்கும், 34 வயது கிராமசேவகருக்கும். மாற்றுச் சம்பந்தத்தை விரும்பும் 35 வயது ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
(18291)

### ஜோதிடம்

உங்களுக்குள்ள கஷ்டங்கள், துன்பங்கள், தடைகள், நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ வழி காட்டுகின்றோம். பலன் கிடைக்காவிட்டால் பணம் திருப்பித் தரப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாலை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை றோட், நல்லூர்.
(18296)

---

யாழ்/ பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி

## ★ பட்டப் படிப்பு ★

**G. A. Q.** மாலை நேர விரிவுரைகள்

[திங்கள் முதல் வெள்ளி வரை]

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன!

அடுத்தவகுப்பு இன்று 02-10-1991 புதன்கிழமை

நிர்வாகி,
தொடர் கல்வி நிலையம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
சுன்னாகம்.

(சி-0598)

---

## புதிய உயர் கல்லூரி
(NEW COLLEGE OF HIGH STUDIES)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

★ பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான
G. A. Q. (கலை முதற் தேர்வு)
விரிவுரைகள் ஆரம்பம்:
05 - 10 - 1991 (காலை 10-00 மணி)

★ யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கான
G. A. Q. விரிவுரைகள்
ஆரம்பமாகிவிட்டன.

★ யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கான
1st in Com. விரிவுரைகள் ஆரம்பம்:
05 - 10 - 1991 (காலை 9-00 மணி)

- நிர்வாகி,
திருமதி S. அருள்நங்கை.

(சி-0606)

---

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர்
நடத்தும்

## சர்வதேச நல்லொழுக்க தின விழா

அக்டோபர் - 3

இடம்:- கலைவாணி நல்லொழுக்க சங்க கலை அரங்கு, தொல்புரம்.

காலம்:- 03 10 - 1991 மாலை 1-30 மணி

நிகழ்ச்சிகள்

★ சிறப்புரைகள் ★ நடனம்
★ இசைக்கச்சேரி ★ பட்டிமன்றம்

நல்லொழுக்க சங்க அங்கத்தவர்களை [மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.
தொல்புரம், சுழிபுரம். [4319]

---

லெப். சிரஞ்சீவி (ஐங்கரன்)
ஞாபகார்த்த
உதைபந்தாட்ட, மென்பந்து கிரிக்கெட்

## போட்டிகள்

சுன்னாகம் தெற்கு, முத்தமிழ் மன்றத்தினர்

1. ஏழு பேர் கொண்ட விலக்குகை (நொக்கவுட்) முறையில் அமைந்த உதைபந்தாட்டப் போட்டிகள்.
2. ஏழு பேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 6 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகளை நடத்தவுள்ளனர். பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

செயலாளர்,
முத்தமிழ் மன்றம்,
இலங்கை வங்கி ஒழுங்கை (முருகேச பண்டிதர் வீதி)
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

விண்ணப்ப முடிவு திகதி: 05 - 10 - 1991
[சி-0665]

---

## இரத்தம் தேவை

A நெகட்டிவ் இரத்தம் கிறபின்ளை ஒன்றிற்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது. தயவு செய்து இந்தக் குறூப் இரத்தம் உள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
றியோ கிறீம் ஹவுஸ்,
75, 3-ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [18300]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 30 | 02 |
| 05 | 10 |
| 1921 | 1986 |

திருமதி
**மரியரத்தினம் குணரத்தினம்**

''உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் என்றும் அழியாது''

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''நவஜோதி'',
புனைவிரத ஒழுங்கை,
சாவகச்சேரி. [18377]

---

PHYSICS - திரு: ரவீந்திரநாதன்
B. Sc., Dip - in - ED.

சனி } 4-30 — HEAT
ஞாயிறு }
புதன் 4-00 — MECHANICS

ஆரம்பம்: 02 - 10 - 1991

**BOND** கல்வி நிறுவனம்,
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4321]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி







| அமரர் | திருமதி | செல்வன் |
|---|---|---|
| சின்னத்துரை சிவசுப்பிரமணியம் | தவமணி சிவசுப்பிரமணியம் | சிவசுப்பிரமணியம் சிவசங்கர் |
| (இளைப்பாறிய நீர்ப்பாசன அதிபர்) | (இளைப்பாறிய ஆசிரியை) | (வைத்திய பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) |
| மலர்வு: 11-10 1928 | மலர்வு: 13-11-1929 | மலர்வு: 23-03-1967 |

அந்நியர் அழிப்பு: 16 — 10 — 1987

திதி: 02 — 10 — 1991

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வங்களே! நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:

சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மாமன்மார்கள், மாமிமார்கள், பெரியதாய், சிறியதாய்மார்கள். சித்தப்பாமார்கள், மருமக்கள், நவி, நதியா.

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். [18[illegible]]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
14 - 1 - 1935

அரக்கர் அழிப்பில்:
12 - 10 - 1990

திதி:
2 - 10 - 1991

அமரர்
**சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்**
[முகாமையாளர், காங்கேசன் சீமேந்துக் கூட்டுத் தாபனம்]

தென்றலில் தவழ்ந்ததொரு தேன்மலர் சாய்ந்ததம்மா
கொடிய 'ஷெல்' அரக்கன் கொடுமையால அழைத்
தானம்மா - ஐயகோ!
ஓடினோம்! தேடினோம்; வாடி நிதம் அழுகின்றோம்;
மறப்போமா உங்களை எம்முயிர் இருக்கும்வரை
ஓராண்டு கடந்தாலும் நின் நினைவுகளால் -
நித்தம் நித்தம்
நினைந்துருகி நீறாகிப் போகிறோம் -
தெய்வமே! அப்பாவே!!

குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரியடி,
இணுவில். [18294]

---

## 59 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்:
17 - 10 - 1973

வீரமரணம்:
05 - 08 - 1991

திதி:
02 — 10 — 1991

**வீரவேங்கை ஜெசிந்**
(குலசிங்கம் கபிலன்)

களம் பல கண்டு மண் காத்து தமிழீழம் -
பெற நினைத்தாய்
கடும் சமர் புரிந்து ஆனையிறவில் -
களப்பலியானாய்
காவியமாகிவிட்ட உன் பிரிவால் நாம் இங்கு
கொழு கொம்பை இழந்துவிட்ட கொடிபோல் -
தவிக்கின்றோம்
கொற்றவனே உன் ஆசை நிறைவுற்று -
இத் தமிழீழ காற்றில்
கொலுவிருந்து எங்களுடன் குலாவுவாய் -
என அமைதி காண்போம்.

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

37, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். [17949]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வெளிவாரி பட்டப்படிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் முதன்முறையாக வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதி செய்யப்படுகிறது. உயர்கல்வியில் ஆர்வமும், அக்கறையும் உள்ள சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு பட்டதாரிகளாகும் வாய்ப்புக் கிடைக்கிறது.

சந்தர்ப்ப, சூழ்நிலைகள் காரணமாக, பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவதற்கு வாய்ப்பிழந்தவர்களுக்கு உயர் கல்வி வசதி அளிப்பதே வெளிவாரிப் பட்டப்படிப்பு முறையின் நோக்கமாகும்.

இதுவரை காலமும் வட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகம் வழங்கிய வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதிகளையே அனேகமாகப் பயன்படுத்தி வந்தனர். அதன் பொருட்டு பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும், மற்றும் பல தேவைகளின் பொருட்டும் அவர்கள் வெளியூர் பயணம் செய்ய வேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான கல்வி வசதி செய்யப்படுவதால், அந்தச் சிரமங்கள் இல்லாமலே உயர்கல்வி பெற வாய்ப்பு உண்டாகிறது. ஆகையால், பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி பெறுவதற்கு வாய்ப்பிழந்தவர்களுக்கும், தொழில் செய்து கொண்டே உயர்கல்வி பெறுவதில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும்.

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று, அங்கு முழுநேரம் பயின்று பட்டம் பெறுவோருக்கும், வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதியின் கீழ் பயின்று பட்டதாரிகளாவோருக்கும், எல்லா வகைகளிலும் சமமான சலுகைகளும், வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. ஆகவே, யாழ்ப்பாணத்திலேயே வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதி மூலம் உயர்கல்வி பெற்று, பட்டதாரிகளாவதற்குக் கிடைக்கும் வாய்ப்பை மாணவர்கள் நழுவ விடக்கூடாது.

உயர் கல்வியில் அக்கறையுள்ளவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை நிச்சயம் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கலை, வர்த்தகத் துறைகள் சார்ந்த பட்டப் படிப்புகளே வெளிவாரியாக ஆரம்பிக்கப்பட உள்ளன. இத்துறைகளில் உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பாடங்களைப் பயின்றவர்களும் சேர்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானப் பாடங்களைப் பயின்றதால் கலைத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடாது என்று மாணவர்கள் தப்பாக எண்ணலாகாது. கலைத்துறையிலும் விஞ்ஞானம் சார்ந்த பல பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடங்களைப் பயின்றவர்கள் கலை, வர்த்தகத் துறைகளைக் கற்றுத் திறமையுடன் தேர்ச்சி அடைய முடியும். கலை, வர்த்தகத் துறைகள் விஞ்ஞானத் துறையை விட, எந்த விதத்திலும் குறைந்தவை அல்ல.

இத்துறைகளில் சேர்ந்து பயில விரும்பும் மாணவர், தங்களைப் பதிவு செய்வதற்கான கடைசித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானப் பாடங்களைப் பயின்றவர்களும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நன்மை அடைவார்கள் என நம்புகிறோம்.

# ஜே. வி. பியை வீழ்த்தியவர் ரஞ்சன்; ஆனால் மதிப்பெடுப்பவர் வேறுநபர்

## நாடாளுமன்றில் அனுரா

கொழும்பு, அக். 2

காலஞ்சென்ற ரஞ்சன் விஜேரத்னா, ஜே. வி. பியுடன் தனித்து நின்று போராடியே வெற்றி பெற்றார். ஆனால் அதற்குரிய மதிப்பை இப்போது வேறு ஒருவர் தனதாக்கிக் கொண்டார்.

அந்த வேறொருவர் ஜே. ஆர். அரசாங்கத்தின் காலத்தில் ஜே. வி. பிக்கு உற்சாகமளித்தார்: அவர் ஜே. வி. பியினருக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் கூட வழங்கியிருக்கிறார்.

இவ்வாறு கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

யுத்தத்தில் மரணமடையும் ஒவ்வொரு சிப்பாயின் இழப்புக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

ஆனையிறவில் எமது ஹெலிகொப்டர்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்ட விமான எதிர்ப்பு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தினாலேயே வழங்கப்பட்டன.

அரசாங்கம் வழங்கிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் ஒரு நாள் அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படுத்துவர் என்பது அரசுக்குத் தெரியாமல் போனதா?

விடுதலைப் புலிகள் தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை திருப்பித் தருவார்கள் அல்லது புதைத்து விடுவார்கள் என்று அரசு எண்ணியதா?

சிறீலங்கா சுதந்திரக் கட்சி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. சுதந்திரமான ஒரு தேர்தல் நடக்க உதவுமாறே நாம் அப்போது விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொண்டோம்.

ஈரோஸ் உறுப்பினர் நாடாளுமன்றத்துக்கு வந்த விதமும், அவர்கள் வாக்களித்த விதமும் உண்மையான வேடத்தை அம்பலப்படுத்தும். அவர்கள் ஈரோஸ் அல்லர்; விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவர்களே — என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (அ)

## பிரேமாவை ஆதரித்த பிக்கு அவருக்கு எதிராக அறிக்கை

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு ஆதரவாக இதுவரை இருந்து வந்த பிரபல பௌத்த பிக்கு எல்ல குணவரச, ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

"ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றம் வருவதை பிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்க வேண்டும் — என்று அவர் அந்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

பாம்பைத் தனது மடியில் வைத்துக்கொள்ள ஒருவர் விரும்பினால் அதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் அந்தப் பாம்பு கடித்து அலறும்போது நாங்கள் காப்பாற்றச் செல்லமாட்டோம்." — என்றும் அவர் ஜனாதிபதியை எச்சரித்திருக்கிறார்.

இந்தப் பௌத்தபிக்கு திரு. பிரேமதாசவுக்கு எதிராகத் திரும்பியிருப்பது, புத்த பிக்குகளின் ஆதரவை திரு. பிரேமதாஸா இழந்து வருகிறார் என்பதை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## யாழ். இந்து விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், அக். 2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. க. டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## தமிழ் தேசிய இராணுவம் சட்டவிரோத அமைப்பு அல்ல

### வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, அக். 2

வரதராஜப்பெருமாள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த சமயம் உருவாக்கப்பட்ட 'தமிழ்தேசிய இராணுவம்' ஒரு சட்டவிரோத அமைப்பு அல்ல. பாதுகாப்புக் கவுன்ஸிலின் அனுமதியுடனேயே அது அப்போது அமைக்கப்பட்டது. ஆகவே தமிழ் தேசிய இராணுவத்துக்கு எதிராகச் சண்டையிடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதம் வழங்கியதாகக் கூறப்படுவது ஒரு பாரதூரமான விடயமாகும்.

இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய சோஷலிச கூணி எம். பி. திரு. வாசுதேவ நாணயக்கார கடந்த புதன்கிழமை அவசரகாலச்சட்டம் நீடிப்பு விவாதத்தில் உரை நிகழ்த்துகையில், மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 15 ஆயிரம் பேரை தொடர்ந்து சிறையில் அடைத்து வைக்கத்தான் அவசரகாலச் சட்டம் உதவுகிறது என்றார்.

## யாழ்ப்பாணத்தில் விரைவில் தேசிய கொடி பறக்குமாம்

### ஐ. தே. கவின் எம். பி. கூறுகிறார்

கொழும்பு, அக். 2

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தேசியக்கொடி ஏற்றும் நாள் விரைவில் வரும் என்று கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. எம். பி. திரு. எச். ஆர். பிட்சிறி கூறினார்.

புலிகளிடம் இருந்து நாட்டை மீட்கும் இறுதிக்கட்ட யுத்தத்தில் படையினர் தற்போது இறங்கியுள்ளனர். இத்தகைய நேரத்தில் கொழும்பு போன்ற இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்படலாம். இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## சர்வாதிகாரி பொக்காஸா போன்றவர் பிரேமதாஸா

### காமினி வர்ணனை

கொழும்பு, அக். 2

மத்திய ஆபிரிக்க குடியரசின் சர்வாதிகாரியாக இருந்து, பின்னர் மக்கள் எழுச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாட்டை விட்டுத் தப்பி ஓடிய பொக்காஸாவுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் இடையே ஓர் ஒற்றுமை இருப்பதாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

கேகாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு சொன்னார். அங்கு அவர் மேலும் சொன்னதாவது;

பதவியில் இருந்த சமயம் பொக்காஸா தன்னை ஒரு மன்னனாக நினைத்துக் கொண்டார். நெப்போலியன் அணிந்த முடி, உடை, நெப்போலியன் அமர்ந்த சிம்மாசனம் போன்றவற்றின் மாதிரிகளைப் பெற்று வரும்படி ஒரு தூதுக் குழுவை பொக்காஸா பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அதன்படி பிரான்ஸிலிருந்து கொண்டுவரப்பட்ட நெப்போலியன் மாதிரி உடை அணிந்து, முடி தரித்து, நெப்போலியன் அமர்ந்தது போன்ற சிம்மாசனம் ஒன்றில் தானும் அமர்ந்து தன்னை ஒரு மன்னராக பொக்காஸா பிரகடனப்படுத்திக்கொண்டார்.

முடிவில் மக்கள் தனக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததைக் கண்ட 'மன்னர் பொக்காஸா' சொந்த நாட்டை விட்டு தப்பி ஓட வேண்டியதாயிற்று.

ஜனாதிபதித் தேர்தலின் போது சாதாரண வர்க்கத்தில் இருந்து வந்தவன் என்று கூறிக்கொண்ட திரு. பிரேமதாஸா, இன்று தன்னைப் பற்றி ஒரு சரித்திரத்தைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

'கம் உதாவ', 'ஜனசவிய' மற்றும் 'கிராமோதய' போன்ற கொள்கைகள் எல்லாம் திரு. பிரேமதாஸாவின் சொந்தச் சரக்கல்ல. அவற்றை அவர் சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஏ. ரீ. ஆரியரத்தினாவிடம் இருந்து இரவல் வாங்கியிருக்கிறார் [...]

"அவர் 'நம்பர் வண்' எல். ரி. ரி. ஈ."

## பாஸ்கரலிங்கம் அரசுடன் இருக்கும் வரை போரில் நாங்கள் வெல்ல முடியாது

### ரஞ்சன் சொன்னதாக பிரேமச்சந்திரா தகவல்

கொழும்பு, அக். 2

அமைச்சரவைக் கூட்டத்தின்போது நிதி அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கமும் இருப்பது வழக்கம். அப்படி ஒரு தடவை அவர் கூட்டத்திற்கு வந்திருந்தபோது, மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா அவரைச் சுட்டிக் காட்டி, "பிரேம்! அந்த மனிதர் 'நம்பர் வண்' எல் ரி ரி ஈ. அவர் எங்களுடன் இருக்கும் வரை இந்தப் போரில் நாங்கள் வெல்ல முடியாது" — என்று என்னிடம் சொன்னார்.

— இப்படிக் கூறினார் முன்னாள் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா.

அமைச்சரவையிலிருந்து தாம் ராஜினாமாச் செய்த தற்கான காரணத்தை விளக்கி, கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே, அவர் இப்படிச் சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் இராணுவ உபகரணங்களை வழங்கியது என்பது இன்று ஒரு பகிரங்க இரகசியம்.

உத்தியோகபூர்வமற்ற தங்கள் இராணுவத்தினர் சகிதம் விடுதலைப் புலிகள் கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டனர்.

அந்தக் காலகட்டத்தில் தான் அவர்களுக்கு அரசு ஆயுதங்களை வழங்கியது:

இராணுவத்தில் சேர்க்கப்படும் அப்பாவி இளைஞர்கள் விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்படுகிறார்கள்.

இருபது முதல் முப்பது கிலோ கிராம் இறைச்சித் துண்டுகளை மட்டும் கொண்ட பிரேதப் பெட்டிகள் சீல் வைக்கப்பட்ட நிலையில் அவர்களது வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்கள் இன்று இவ்வளவு கவலைக்குரிய நிலையில் இருப்பதற்கு புலிகளுக்கு அரசு ஆயுதங்கள் வழங்கியதே காரணம்;

இந்திய அமைதி காக்கும் படை இங்கிருந்து சென்றதும் வடக்கை விடுதலைப் புலிகள் எடுத்துக் கொண்டனர்.

ஸ்ரீலங்காவின் ஐக்கியமும், இறைமையும் பேணப்படும் என்று எண்கோண மண்டபத்திலிருந்து தலைவர் உறுதி அளித்தார். ஆனால், அந்த உறுதிமொழி உடைந்து போய்விட்டது. என்னால் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியவில்லை— என்றார். [உ]

## ஹெய்ட்டியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் இரு நூறுக்கு மேற்பட்டோர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதத்திலேயே ஹெய்ட்டியில் தேர்தல் நடத்தப்பட்டு நாடாளுமன்ற ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. (இ-10)

## கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளன.

இத்தகைய காரணங்களைக் காட்டி, மாநாட்டை நடத்த விடாமல் செய்ய இந்தியா முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா குற்றஞ்சாட்டுகிறது.

இதற்கிடையில்—

மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களின் உபயோகத்துக்கென ஆறு பெலிகன் ஹெலிகொப்டர்களை தந்துதவுமாறு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை ஸ்ரீலங்கா அதிகாரிகள் கேட்டுள்ளனர். [உ-எ-10]

## பட்ஜெட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜெட் விமானங்கள், வை - 12 ரக விமானங்கள், வேகத் தாக்குதல் விமானங்கள், 130 எம். எம் பீரங்கி ஆயுதங்கள், கவச வாகனங்கள் போன்றவற்றைக் கொண்ட பலமான பாதுகாப்பு அமைப்பை ஸ்ரீலங்கா உருவாக்கி வருகின்றது.

இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கியது என்றும் அவர் சொன்னார்.

அடிப்படையில் போர் என்பது எண்ணிக்கை பற்றிய ஓர் விளையாட்டுத்தான். ஒரு கோடி 70 லட்சம் சிங்களவர்களை 32 லட்சம் தமிழர்கள் எதிர்ப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் மறைத்து வைக்கப்படும் ஒவ்வொரு கண்ணியும் ஒவ்வொரு அதிரடித் தாக்குதலே. அதாவது கண்ணிகள் மூலம் நீங்கள் உங்கள் எண்ணிக்கையை பல மடங்காக உயர்த்தலாம் - என்றும் அவர் சொன்னார்.

கடந்த வருடம் அவர் எழுதி வெளியான ஒரு புத்தகத்தில் ஸ்ரீலங்காப் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் ஒரே நேரத்தில் ஒருவருக்கு மற்றையவர் பற்றி தெரியாமல் ஒரே இஸ்ரவேலிய தளத்தில் வைத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது என்று தகவல் வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

1983 ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் தீவிரவாதிகளுக்கு இஸ்ரவேல் பயிற்சியளித்து வந்தது என்று கடந்த மே மாதம் "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டதாக லெபனான் மற்றும் இஸ்ரவேலைச் சேர்ந்த மூத்த அனுபவசாலிகள் கூலிக்கு அமர்த்தப்பட்டனர் என்றும்-

ஹொங்கொங்கிலிருந்தும், சிங்கப்பூரிலிருந்தும் ஆயுதங்களை தமிழ்நாட்டுக்கு ஏற்றிச் சென்று அதன் மூலம் அங்கிருந்து வடக்கு ஸ்ரீலங்காவுக்கு அவற்றை அனுப்புவதற்கு கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதாகவும் -

"வாஷிங்டன் போஸ்ட்" செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. [உ]

## நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், அக். 2

முறைசாராக் கல்வி போதனாசிரியர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று, நாளை காலை 9 மணிக்கு யாழ் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 2

முறைசாராக் கல்விப் பிரிவினில் தொழில்திறன் பயின்று, உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு சுயதொழில் செய்ய விரும்புவோருக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 1 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 2

யாழ். மாவட்ட பலநோ. கூ. சங்க பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல், நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். பலநோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகக் கரையோரத்தில் அகதி முகாம்கள் மூடப்பட்டன

சென்னை, அக். 2

தஞ்சாவூர் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியிலும், நாகபட்டணத்திலும், அதைச் சுற்றியுள்ள வேறு சில இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்த இலங்கை அகதிகளுக்கான முகாம்கள் அனைத்தும் பாதுகாப்புக்கருதி மூடப்பட்டு விட்டன. வேறு இடங்களுக்கு அகதிகள் மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தப் பணியின் இறுதி நடவடிக்கையாக பிரதாபராமபுரம் முகாமிலிருந்து 446 ஈழ அகதிகள் நாமக்கல்லுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாகபட்டணம், வடபெரிய்கை நல்லூர், ராமேஸ்வரம், வேட்டைக்காரன் இருப்பு ஆகிய கிராமங்களில் அமைந்திருந்த முகாம்களில் இருந்தே அகதிகள் வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வட ஆற்காடு மாவட்டம், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தர்மபுரி, சத்திய மங்கலம், திருச்சி ஆகிய இடங்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கரையோரங்களில் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் முகமாக தமிழ்நாடு மேற்கொண்டுள்ள 4 அம்ச திட்டத்தின் ஒரு பகுதியாகவே முகாம்கள் மூடப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தென்னாற்காடு மாவட்டத்தின் 4 முகாம்களில் தங்க வைக்கப்பட்ட தமிழ் அகதிகள் 1,400 பேர் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஆகிய இடங்களிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களின் காவல் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறிய 40 இலங்கைத் தமிழர்களை கண்டுபிடிக்கப்பட்டு விழுப்புரத்திலுள்ள தனி முகாமில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். [த]

## திருமலையில் தமிழர் சிகிச்சை பெறுவதில் சிக்கல்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றிய தமிழ் பேசும் டாக்டர்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டு அந்த இடங்களுக்கு சிங்கள மொழி பேசும் டாக்டர்கள் நியமிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமிழர்கள் சிகிச்சை பெறமுடியாது கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமங்களில் வாழும் தமிழர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் முன்வந்தாலும், அதைச் செயற்படுத்த விடாது படையினர் தடை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## அநாதரவான பிள்ளைகள் முதியோருக்கு புனர்வாழ்வு

### விவரம் சேகரிக்கப்படுகிறது

வடக்கு - கிழக்கில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு, அநாதைகளான நிலையிலுள்ள குழந்தைகள் மற்றும் முதியவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக இந்த விவரங்கள் சேகரிக்கப்படுவதாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளானவர்கள் தங்கள் பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களைக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அநாதரவாக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கும், முதியவர்களுக்கும் புனர்வாழ்வளித்து உதவ சில பொதுஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. [ஓ]

## யாழ். மாவட்டத்தில் எழுதுவினைஞர் பதவிக்கு 6 ஆயிரம் பேர் விண்ணப்பம்

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் எழுதுவினைஞர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைக்கு சுமார் ஆறாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அதே போன்று கிராம சேவையாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு சுமார் இரண்டாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களை யாழ். செயலகத்தில் ஏற்பதற்கும், இங்கேயே போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கும் அரசினால் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி தினம் கடந்த 30 ஆம் திகதி ஆகும்.

எழுதுவினைஞர் பதவிக்கு சுமார் 267 வெற்றிடங்களே இருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-100)

## விண்ணப்பப் படிவங்கள் கையேற்பது நிறுத்தம்

1-8-1954 கருப் பின் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களைக் கையேற்பதை யாழ். பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகம் நேற்று முதலாம் திகதி தொடக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

விண்ணப்பப் படிவங்களைக் கையளிப்பதற்காக நேற்று யாழ். செயலகத்துக்கு வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான இரு பக்கப் படிவம் முடிவடைந்துள்ளதே இந்த நடவடிக்கைக்குக் காரணம் ஆகும்.

அதே சமயம், இறப்பு - திருமண விண்ணப்பப் படிவங்களும், 1954 க்கு முன் பிறந்தவர்களின் விண்ணப்பப் படிவங்களும் ஏற்கப்பட்டு வருவதாக மேலதிக பதிவாளர் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார். (இ-100)

## வட - இலங்கை நுண்கலை மன்றம்

வட - இலங்கை நுண்கலை மன்றத்தின் 1991 ஆம் ஆண்டு பரீட்சை விண்ணப்பங்கள் தாமதக் கட்டணத்துடன் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். [ஓ-8]

## நாகர்கோவிலில் பயண அனுமதி அலுவலகம்

வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான பயண அனுமதி வழங்கும் அலுவலகம், வடமராட்சி கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கும் நாகர்கோவில் சவேரியார் கோவிலடியில் இயங்கி வருகிறது.

அலுவலக நாட்களான செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் இங்கு பயண அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (ஓ)

## பிரிவுபசாரம்

கிளிநொச்சி, கண்டாவளை பெரியகுளம் ஐயனார் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. சி. மகாலிங்கத்துக்கு இன்று முற்பகல் 10 மணியளவில் வித்தியாலயத்தில் பிரிவுபசார விழா ஒன்று நடத்தப்படுகிறது.

கொத்தணி அதிபர் திரு. ஏ. குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ஓ-8)

## உணவு முத்திரை

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் யாழ். சமூக சேவைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளன. (இ-100)

## 3 மீனவர்கள் உயிரிழப்பு

சென்னை, அக். 2

தமிழ்நாடு கன்னியாகுமரியில் இடம்பெற்ற பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்த மீனவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

அதிக பேருந்து நிலையங்களை அமைக்கக் கோரி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் - அவர்களைக் கலைக்க தமிழ்நாடு பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் தெரிந்தவையே. (இ-த)

## முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று விமான குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், அக். 2

முல்லைத்தீவுப் பகுதியில் தண்ணீரூற்று, 3 ஆம் கட்டை, சிலாவத்தைப் பகுதிகளில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இரு பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஆகியன கண்டபடி குண்டுகளை வீசித் தாக்கின.

சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஓ-15)

### கட்சியிலிருந்து நீக்கியதை எதிர்த்து

## லலித் குழு நீதிமன்றில் இன்று அல்லது நாளை மனு

கொழும்பு, அக். 2

ஆளும் ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, ஜி. எம். பிரேமசந்திரா, காமினி திஸநாயக்கா உட்பட எட்டு எம். பிக்கள் தமது எம். பி. பதவிகளைத் தொடர்ந்து காப்பாற்றிக்கொள்ள —

கட்சியிலிருந்து தங்களை வெளியேற்றியதை ஆட்சேபித்து நாளை மறுதினத்துக்கு முன்பாக உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய வேண்டும்.

அத்துலத் முதலி குழுவினர் இன்று அல்லது நாளை நீதிமன்றில் தமது மனுக்களைத் தாக்கல் செய்வர் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பிரேமரட்ன குணசேகரா, லக்ஷ்மன் செனிவிரட்ன, சமரவீர வீரவன்னி, சந்திரா கங்கந்த, வின்சென்ட் பெரேரா ஆகியோரே ஏனைய ஐந்து எம். பிக்களுமாவர்.

கட்சி உறுப்பினர் பட்டியலில் இருந்து ஒருவர் நீக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு அவர் தொடர்ந்து எம். பியாகச் செயற்படலாம் என்று அரசமைப்பின் 99 [13] ஆம் பிரிவு தெரிவிக்கிறது.

இந்த ஒரு மாத காலம் முடிவதற்கு முன்னர் தாம் வெளியேற்றப்பட்டதற்கு எதிராக அந்த நபர் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தால் — அந்த மனு மீதான தீர்ப்பு வெளியாகும் வரை — சுமார் இரண்டு மாதங்களுக்கு அவர் எம். பி. பதவியில் நீடிக்கலாம்.

இதன்படி எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் லலித் குழுவினர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் அவர்கள் தொடர்ந்து எம். பி. பதவியில் நீடிக்க முடியும்.

எனினும் 5, 6 ஆம் திகதி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்பதால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. [உ]

## இலங்கை உட்பட ஆசிய நாடுகளில் மந்தமான பொருளாதார நிலை

கொழும்பு, அக். 2

இலங்கை உட்பட பல ஆசிய நாடுகள் நிச்சயமற்ற, மந்தமான பொருளாதார நிலையை எதிர் நோக்குகின்றன என்று உலகவங்கி கடந்த வாரம் வெளியிட்ட 1991 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பெருமளவு செலவு ஏற்படுத்தும் நடவடிக்கைகளினால் வளர்ச்சிப் பணிகள் கட்டுப்படுத்தப்பட்டு இந் நிலை தோன்றியுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தாலும், வளைகுடா நெருக்கடியாலும் இலங்கை பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் சாதகமான கால நிலையாலும் வளர்ச்சியை நோக்காகக் கொண்ட பொருளாதாரத் திட்டங்களாலும் 1987-1989 காலப் பகுதியில் 2 சதவீதமாக இருந்த இலங்கையின் மொத்த வளர்ச்சி உற்பத்தி 1990 இல் 6 சதவீதமாக உயர்ந்தது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தப்பி ஓடிய இவரைக் கண்டீர்களா?



யாழ்ப்பாணம், அக். 2

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்து புளொட்டைச் சேர்ந்த சிறீ [கணேசன் சிறீ கணேசன் — புவிதன்] என்பவர் நேற்று அதிகாலை தப்பியோடி விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

மெல்லிய தோற்றமுடைய இவரின் உயரம் 5 அடி 4 அங்குலமாகும். கறுப்பு நிறமானவர். தப்பியோடும் போது படத்தில் காணப்படுவதை விட சற்றுக் கூடுதலான தலைமயிருடன் தோற்றமளித்தார்.

இவரைக் காண்பவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் அருகாமையில் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலகத்துக்கு அறிவிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

சுழிபுரம், உடுவில், இணுவில், குருநகர் பகுதிகளில் இவர் முன்னர் நடமாடியவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ]

## சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், அக். 2

சுமார் 25 அடி உயர நாவல் மரத்தில் இருந்து விழுந்த சிறுவன் ஒருவன் தலையில் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் சுந்தரம் குகனேஸ்வரன் (வயது 12) என்ற சிறுவனே படுகாயம் அடைந்தான். (ஓ-15)

## நம்பிக்கை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரேரணையை விவாதத்துக்கு எடுக்க அவர் அனுமதி வழங்குவார் என்றும் — அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (அ)


# Chundikuli Girl's College

## பரிசளிப்பு விழா-1991

இவ்விழா அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம அதிதி:
பேராசிரியர் வ. ஆறுமுகம்,
(தலைவர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குதல்:
திருமதி செல்வராணி ஆறுமுகம்

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

அதிபர், ஆசிரியர், மாணவர்.
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

(சி/0604)


## மரண அறிவித்தல்

### சேனாதிராஜா தயாபரன்

கே. கே. எஸ், றோட் மல்லாகத்தைச் சேர்ந்த சேனாதிராஜா தயாபரன் 1-10-1991 இல் அகால மரணமானார்.

அன்னார் சேனாதிராஜா - ஜெயநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், Dr. ஜெயந்திதேவி, அருள்நேசன் [நோர்வே], யோகராஜா [ஜேர்மனி], சுலோஜனா, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணமூர்த்தி [காசாளர், தெ. ப. உ. ச.] அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-10-1991 காலை 9-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. கிருஷ்ணமூர்த்தி [மைத்துனர்]
கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4522)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org